# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கை குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 90 — 1973 දෙසැම්බර් 14 වැනි සිකුරාදා — 1973.12 14

90 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 487 |
| பதவிகள்—வெற்றிடம் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 487 |
| துணை விதிகள் | 488 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| வரவு செலவுத் திரட்டுகள் | — |
| ஆதன விற்பனைகள் | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| நானாவித அறிவித்தல்கள் | 488 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல் ஜீ டி/எச் டி/1/3/5

**கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (2) என்னும் உட்பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 1 ந் உ.

கட்டளை

கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (1) என்னும் உட்பிரிவு இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிற்றக் கோறளை பல்லே பற்றுக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபைக்குப் பொருந்தாது எனப் பிரசித்தப்படுத்தி 1971 நவெம்பர் 5 இன் 14,983 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை இத்தால் வழக்கழிக்கப்படுகிறது.

12-435—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

**உள்ளூராட்சிச் சேவை**

கீழ்த்தர சுருக்கெழுத்தாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—9.5.73

முதலாவது வினைத்திறமைகாண்தடைப் பரீட்சை (சிங்களம்) :—

டி. எஸ். பெரேரா—சித்தி

இரண்டாவது வினைத்திறமைகாண்தடைப் பரீட்சை (ஆங்கிலம்) :—

எப். பி. ஏ. சில்வா—சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்.

இரண்டாவது வினைத்திறமைகாண்தடைப் பரீட்சை—மாநாடு பரீட்சை (சிங்களம்) :—

*1. எம். டி. முனிதாச—சித்தி.

*2. எம். ஜி. நந்தபால—சித்தி.

இரண்டாவது வினைத்திறமைகாண்தடைப் பரீட்சை—(மாநாடு பரீட்சை) (ஆங்கிலம்) :—

*ஏ. பி. பெர்னாண்டோ—சித்தி.

*பரீட்சையைப் பூர்த்திசெய்துள்ளனர்.

எட்கா பர்னாந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு நவெம்பர் மீ 22 ந் உ.

12-352—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 05 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

# துணை விதிகள்

ச. வ.—பீ 23/64

**தங்கொட்டுவைப் பட்டினசபை**

*பட்டினசபைகள் கட்டளைசசட்டம்*

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152 (1), 156 ஆகிய பிரிவுகளின் கீழ் தங்கொட்டுவைப் பட்டினசபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப் பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலு வல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 3 ந் உ.

**துணைவிதிகள்**

*பொதுச்சந்தை*

1. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நியமத்துணைவிதிகளின் 15 ஆம் பாகத்தில் 1 ஆம் துணைவிதியின் நோக்கத்துக்காக, சந்தைப்பிர தேசமானது சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசமாதல் வேண்டும்.

2. எந்த ஆளும், தவிசாளரினால் அதற்கென வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அதிகாரத்தின்பேரிலன்றி, பொதுச்சந்தையில் தவிர பன்றி இறைச்சி, பழம், அல்லது காய்கறிகள் எவற்றையும் விற்கவோ விற்க முனையவோ விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்திருக்கவோ ஆகாது.

3. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நியமத்துணைவிதிகளின் 15 ஆம் பாகத்தின் 4 ஆம் துணைவிதியின் நோக்கத்துக்காக, சந்தையி லுள்ள கடை, ஆசனம் அல்லது இடமெதையும் உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சிபுரிவதற்கு பின்வரும் விகிதங்களிலான கட்டணமொன்று விதிக்கப்பட்டுச் செலுத்தப்படல் வேண்டும் :—

| | நாளொன் றுக்கான கட்டணம் ரூபா ச. |
|---|---|
| (1) நிரந்தர அல்லது தற்காலிக கடை, அறை அல்லது குடில் ஒவ்வொன்றுக்கும் 60, சதுர அடிக்கு மேற்படாத விடத்து .. .. .. | 2 50 |
| 60 சதுர அடிக்கு மேற்படுமிடத்து .. .. | 4 0 |
| (2) வெளியிடத்திலுள்ள தளப்பரப்புக்கூறு ஒவ்வொன்றுக் கும்— | |
| (அ) 09 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 0 25 |
| (ஆ) 09 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 18 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 0 75 |
| (இ) 18 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 24 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 1 50 |
| (ஈ) 24 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 30 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 2 0 |
| (உ) 30 சதுர அடிக்கு மேற்படும் ஒவ்வொரு மேலதிகச் சதுர அடிக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் .. | 0 50 |

4. இத்துணைவிதிகளில்—

"தவிசாளர்" என்பது சபைத்தவிசாளர் எனப் பொருள்படும் ;

"சபை" என்பது தங்கொட்டுவைப் பட்டினசபை எனப் பொருள் படும் : அத்துடன்

"பொதுச்சந்தை" என்பது சபையினால் தாபிக்கப்பட்ட சந்தை எனப் பொருள்படும்.

12-436—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90.

[ தொடர்ச்சியை 489 ஆம் பக்கத்தில் பார்க்க ]

# நானாவித அறிவித்தல்கள்

**முள்ளியவளை கிராமசபை**

*இறைமதிப்பு வரி—1974*

கிராமசமுதாயச் சட்டத்தின் 52 ம் பிரிவினால் உண்டாக்கப்பட்ட கிராமசபை களின் 7 ன் 10 ம் பிரிவின்படி, 1974 ம் ஆண்டுக்குரிய இறைமதிப்பு இடாப்புகள் தயார் செய்யப்பட்டுள்ளனவென்றும், அவைகள் முள்ளிய வளைக் கிராமசபைக் கந்தோரில், கந்தோர் நேரங்களில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

சி. சின்னத்துரை, ஜே. பி.
தலைவர்,
கிராமசபை, முள்ளியவளை.

கிராமசபை அலுவலகம்,
முள்ளியவளை,
1973 ம் ஆண்டு நொவெம்பர் மீ 30 ந் உ.

12-447—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

**கரிக்கட்டுமூலை வடக்கு கிராமசபை**

*இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்*

இறைச்சிக்காரர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரி யப்படி இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காணப்படுபவரிடமிருந்து 1974 ம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைக்கு உத்தரவுப்பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்த கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்புக்கான காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினாலு நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளில் எழுத்துமூலம் எனக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**அட்டவணை**

| விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் | வியாபாரத்தின் தன்மை | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| பெ. நல்லதம்பி, 7 ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. | மாட்டிறைச்சிக் கடை .. | முள்ளிவாய்க்கால் |

ஜே. மாற்குப்பிள்ளை, ஜே. பி.,
தலைவர்,
கரிக்கட்டுமூலை வடக்கு கிராம சபை.

முள்ளிவாய்க்கால்,
முல்லைத்தீவு,
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 3 ந் உ.

12-446—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90.

**சம்மாந்துறைக் கிராமசபை**

*இறைச்சிக் கடைக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்*

இறைச்சிக்காரர் பற்றிய 1946 ம் ஆண்டின் 44 ம் இலக்க திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க் காணும் அட்டவணையிற் காண்போரிடமிருந்து 1974 ம் ஆண்டிற்கு மாடு அறுத்து விற்பதற்கான உத்தரவுப்பத்திரம் தருமாறு விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக் கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் மேற்குறிப்பிட்ட உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்பதற்கான காரணங்களை இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் இணைப் பிரதிகளாக எமக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கி. ச. காரியாலயம்,
சம்மாந்துறை,
1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 1௨ ந் உ.

இ. லெ. உதுமாலெவ்வை, ஜே. பி.,
அக்கிராசனர்,
சம்மாந்துறைக் கிராம சபை.

அட்டவணை

| இல. | விண்ணப்பக்காரரின் பெயர் | விலாசம் | செய்யும் தொழில் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|---|---|
| 1 .. | அ. அகமதுலெவ்வை .. | 1 ம் குறிச்சி, சம்மாந்துறை .. | மாட்டிறைச்சி விற்பனை .. | தியேட்டர் அருகாமைச் சந்தி. |
| 2 .. | உ. அகமது முகையதீன் .. | "ஜே" வுளக் மேற்கு, சம்மாந்துறை .. | மாட்டிறைச்சி விற்பனை .. | தீகவாப்பிச் சந்தி. |
| 3 .. | அ. அலியார் .. .. | "ஜே" வுளக் மேற்கு, சம்மாந்துறை .. | மாட்டிறைச்சி விற்பனை .. | விளினையடிச் சந்தி. |
| 4 .. | வெ. உமறுலெவ்வை .. | "ஜே" வுளக் மேற்கு, சம்மாந்துறை .. | மாட்டிறைச்சி விற்பனை .. | கைகாட்டியடிச சந்தி. |

12–485—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## நானுட்டான் மேற்கு கிராமச் சபை

கசாப்புக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

கசாப்புக்காரர் பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 272 ன் 7 (2) ம் பிரிவின் தாற்பரியப்படி இ ன் கீழ்க்காணும் அட்டவணையில் காணப்படும் பெயர்வழிக்காரரிடமிருந்து 1974 ம் ஆண்டு கசாப்புத் தொழில் நடாத்த அனுமதி தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக் கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி வழங்குவதை மறுக்கவிரும்பினால், மறுப்பிற்கான காரணங் களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப் பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படு கின்றது.

சூ. இம்மனுவேல்பிள்ளை,
தலைவர்.

கிராமச் சபை அலுவலகம்,
நானுட்டான் மேற்கு,
நானுட்டான்.
1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 4 ந் உ.

அட்டவணை

| | விண்ணப்பகாரரின் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யவிருக்கும் இடத்தின் பெயர், விலாசம். |
|---|---|---|---|
| 1. | யூ. மீராலெப்பை .. | புதுவெளி, நானுட்டான் .. | அளவக்கை |

12–507—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

[488 ஆம் பக்கத் தொடர்ச்சி]

## தங்காலே நகரம்

நகர சபைகள் கட்டளைச்சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 184 ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 130 (ஆ), 153 ஆகிய பிரிவுகளின் கீழ் தங்காலே நகரத்து விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டதும் அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினால் தமக்களிக்கப் பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
1973 ம் ஆண்டு டிசம்பர் மீ 3 ந் உ.

### துணைவிதி

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 130 (ஆ), ஆகிய பிரிவின் கீழ் அறிவிடப்படுவதும் 1973.2.9 இன் 46 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1973.1.24 ந் தேதிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதுமான 1973 ம் ஆண்டுக்குரிய விசேட தண்ணீர் வரியிலிருந்து இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மனைய கங்கள் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை

#### 1 ம் வட்டாரம்

கதுருப்பொக்கனே வீதி : 49, 65/6, 85, 85/8.
மாத்தறை வீதி : 349, 371/1, 387, 407, 222, 222/1, 260, 262, 296, 336, 354, 354/10, 354/12.
மூர் வீதி : 57/5அ, 57/6.
சிறைச்சாலே வீதி : 6.
பல்லிக்குடாவை வீதி : 19/6, 33அ, 39/7.

#### 2 ம் வட்டாரம்

மாத்தறை வீதி : 3/1, 201/5, 225, 233, 255, 263, 267.
சந்தை வீதி : 51, 57/6, 145, 151, 160.
மூறே வீதி : 51.
பராக்கிரம வீதி : 29, 31, 45/1, 71/1, 52.
மேல்தேக்குத் தோட்டம் : 26, 40/1.

#### 3 ம் வட்டாரம்

அன்னப்பிட்டி வீதி : 7, 11/22, 11/25, 11/30, 32, 32/11, 36, 44, 44/3, 54, 66/1.
பெலியத்தை வீதி : 75ஆ, 75/5, 75/7ஈ, 91, 105/2, 113/7, 117/3அ, 117/4, 117/5, 117/7, 123, 123/1, 127, 155, 84/3, 84/6 84/7, 138/6, 138/9, 150, 190, 192.
நீர்த்தேக்க வீதி : 22/3, 22/15, 22/19அ.
கதுருப்பொக்கனே வீதி : 22, 22/6, 54/1, 54/2.
மாத்தறை வீதி : 68, 72, 80.
தம்மதின்ன ஒழுங்கை : 1, 1/8, 1/12, 1/15, 1/16, 7, 7/1, 7/2, 7/6, 7/7, 7/8, 7/9, 7/11, 9.
இந்திப்பொக்குன வீதி : 8, 14/1, 22/1, 22/2, 22/5, 78/4, 96/1, 96/1அ, 124.

#### 4 ம் வட்டாரம்

மயான வீதி : 7, 13, 2, 4, 6, 6/1, 6/2, 8, 24, 26, 28, 30.
தங்கெற்றிய வீதி : 5/3, 21/5, 21/20, 29, 35/4, 28, 30/12.
தம்மறத்தன மாவத்தை : 7.
அம்பாந்தோட்டை வீதி : 61, 61/18, 61/20, 61/25, 61/27, 71/6, 71/19, 71/28, 71/34, 71/39, 71/44, 79/2, 81, 81/4, 91/12, 105/4, 109, 119, 177, 193, 195, 249, 251, 251/1, 251/3, 255, 263/1, 301.
வீரகெற்றிய வீதி : 18, 22, 26, 30, 32, 36, 68, 94, 166/2, 166/4, 166/10, 166/13, 166/15, 166/23, 15/13, 15/23, 41, 61/8, 69/8, 75, 111/1, 111/4, 131/5.

#### 5 ம் வட்டாரம்

அம்பாந்தோட்டை வீதி : 68, 106/2, 130, 136, 146, 156, 180, 186, 200/4, 200/16, 200/18, 202, 218, 224, 268, 288.
மெதக்கெற்றிய வீதி : 21, 35/2, 35/3, 35/4, 35/5, 35/6, 35/7, 37, 37/1, 37/2, 39, 41, 69, 73, 95, 32, 42/1, 52, 58/4, 70, 76, 80, 88/1, 96, 104.
மோதறை வீதி : 27, 26/9.
அசோகா ஒழுங்கை : 5/1, 18/2, 24.
புது ஒழுங்கை : 7, 16, 18, 18/1, 30.
மெதக்கெற்றியபாதை : 15, 17, 27, 27/1, 55/1, 61, 71/6, 75, 16, 22, 24, 36.
தீபங்கர வீதி : 5, 15, 15ஆ, 21, 35, 12, 22, 32, 36, 40, 40அ, 44, 44/2, 50.
விஜயா வீதி : 7/1, 67, 73/2, 91, 105/2, 109, 117, 117/1, 157, 12, 34/1.

12–509—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| திசெம்பர் | 07.12.73 | வெள்ளி | 30.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 07.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 14.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 21.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.